Vol.21 | No. 4 | April 2017



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## St. Alphonsa College

March 18, 2017

## College Day



Successfully Completing Three Years

Beginning PG Courses



அருள்தூது
இதழ் வெளியீடு
22.03.2017





நம்பிக்கை ஆலயம்
கழுவந்திட்டை
ஆண்டுவிழா - 09.03.2017




சாந்தி நிலையம்
பருத்திவிளை
ஆண்டுவிழா - 27.03.2017

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 4 April 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| Major ArchBishop's Circular | 05 |
| ஆயர் திருமுகம்.. | 08 |
| குழந்தை ஈசோ | 11 |
| சிறுமலர் | 12 |
| இல்வாழ்வு | 13 |
| வின்சென்ட் தே பவுல் | 14 |
| Feast and B'days | 15 |
| அருட்சகோதரர்களிமிருந்து | 16 |
| KKSSS | 11 |
| புனித அல்போன்சா கல்லூரி | 18 |
| மறைமாவட்டச் செய்திகள் | 20 |
| மறைவட்டச் செய்திகள் | 22 |
| Bishop's Engagements | 28 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/68/2017 31 March 2017

Greetings from Bishop's House, Thuckalay!

The opening words from the liturgy of Palm Sunday in the Latin Rite provide us with an excellent summary of the principal themes of Holy Week: "Christ entered in triumph into His own city to complete His work as our Messiah: to suffer, die and rise again . . . Let us remember with devotion this entry which began His saving work . . . and let us follow Him with a lively faith."

First, we are told that Christ entered his city to suffer, die and rise again. This draws our attention to the very core of Holy Week, the Paschal Mystery, in which Jesus suffered and died for our sins and then rose again in glory. These are the events that manifested God's special love for us, events that accomplished our salvation. These are the events that form the heart of the Christian Faith.

Our faith is certainly founded on the great deeds of the past, but those deeds also point us inevitably to the future. The victory of Christ lifts our hearts and minds beyond the limited horizon of the present moment with all of its difficulties and problems, to the future we anticipate as followers of Christ, an ever-so-peaceful future. Our present day troubled world needs that vision and hope in full measure.

The Palm Sunday introduction then invites us to remember with devotion Christ's entry into Jerusalem, words that apply just as well to the entire week. In other words, Palm Sunday sets the stage for the drama that would follow.

On Holy Thursday we gather with the Disciples around the Lord's Table to celebrate the Last Supper and to thank God for the holy gifts He gave us on that occasion - the Eucharist, his own body and blood which would be sacrificed on Calvary the next day; and the Ministerial Priesthood, in which He chooses and consecrates men to be good and holy shepherds, to share in His sacrificial ministry of God's People.

On Good Friday, we enter into the Passion of Christ who endured rejection, humiliation and intense physical pain for the forgiveness of our sins. We follow Jesus as He carries His cross and with Mary, the Mother of Sorrows, we stand at the

foot of the cross to witness the sacrificial death of the Lamb of God. How can we not be moved if we recognize our responsibility for the death of Christ. The Prophet Isaiah rightly reminds us: “It was our infirmities that He bore, our sufferings that He endured.”

During the Easter Vigil, in the darkness of the night, we await at the tomb of the Lord for His promised Resurrection. We immerse ourselves in the symbols of the liturgy: procession with lighted candles, proclamation of the word and the bread and wine - all of which point us to Christ and help us to understand and share in the reality of His death and resurrection.

On Easter Sunday we join with the Christian Church all over the world to proclaim and rejoice in the new life of Christ. It is the event that refreshes our spirits and gives new hope to a tattered, weary world. It is the event that speaks to us of living forever and thus makes our lives here and now more tolerable, even promising.

Let us remember with devotion all of these events of Holy Week. But not only do we “remember” these events as relics of the past but actually enter into them and share in their life-giving spirit once again. That’s the power and glory of Catholic liturgy.

Finally, we are urged to follow Jesus with a lively faith. During this week we not only celebrate the various liturgical celebrations but also follow Jesus with the commitment of our daily lives. At the end of his book, Jesus of Nazareth, Pope Benedict reflects on God’s revelation to the world. His words can help us to appreciate the significance of Holy Week as well: “It is part of the mystery of God that He acts so gently, that He only gradually builds up His history with the great history of mankind; that He continues to knock gently at the doors of our hearts and slowly opens our eyes if we open our doors to Him… And yet - is not this the truly divine way? Not to overwhelm with external power, but to give freedom, to offer and elicit love.”

I invite you, dear Fathers, to make the Holy Week not only memorable in the lives our people but also meaningful in your lives as well. May the celebration of the passion, death and resurrection of Jesus bring graces upon graces in your Priestly ministry!

CONCLUSION

Since Ash Monday, we have been making a Lenten journey of prayer, fasting and almsgiving in order to experience true repentance for our failings and to become worthy to celebrate the great mysteries of the passion, death and resurrection of Jesus Christ. The days of Lent have passed by and we are now on the threshold of the Holy


Week.

The Holy Week is a week of God's blessings upon each one of us. Let us not miss the opportunities of receiving these graces. We need to celebrate this great week through our devout preparation of all the liturgies. On Psalm Sunday, I invite you to walk with Christ in his solemn entry into Jerusalem. On Holy Thursday, I encourage you become involved with the institution of the Holy Eucharist by celebrating the liturgy, which presents rich symbolisms like the washing of the feet. I urge you to accompany Jesus, on Good Friday, in his journey of self-emptying from the Garden of Gethsemane to Mount Calvary in order to wash away our sins. Finally, I appeal to you to enter into the empty tomb like Mary Magdalene and experience the risen Christ on Easter Sunday.

Let us prepare ourselves to meet the risen Lord with true faith and humility like the beloved disciple.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,



+George Rajendran SDB

Bishop of Thuckalay

---

**பங்குப் பிரதிநிதி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி பாசறை**

மறைவட்ட வாரியாக, பங்கு பிரதிநிதி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி பாசறையானது நடைபெற இருக்கின்றது. பங்கு கைக்காரர்களுக்கான சிறப்புப் பயிற்சியும் தனியாக நடத்தப்பட இருக்கின்றது. பயிற்சி நடைபெறும் இடங்களும் நாள் மற்றும் நேரம் குறித்த விபரங்களையும் கீழ் கொடுக்கப் பட்டிருக்கும் அட்டவணையில் காண்க.

| DATE | FORANE | TIME | IN CHARGE |
|---|---|---|---|
| 23-04-17 | Manjalumoodu | 2 -5 pm | Fr. Sathianesan |
| 30-04-17 | Soosaipuram | 2-5 pm | Fr. Christudas |
| 14-05-17 | Sangamam (Meeting of Kaikars, Accountants, Qurbana included) | 8 -4 pm | Bishop, Fr. Dency & Fr. Sathianesan |
| 21-05-17 | Thuckalay-Plankalai | 2- 5 pm | Fr. Dency |
| 28-05-17 | Nithravilai | 2- 5 pm | Fr. Sathianesan |
| 04-06-17 | Padanthalumoodu | 2 -5 pm | Fr. Dency |
| 18-06-17 | Arukani | 2 -5 pm | Fr. Christudas |
| 09-07-17 | Shenkottai Mission | 2 -5 pm | Fr. Sathianesan |

Prot. No. 0310/2017

# CIRCULAR

Circular of the Major Archbishop after the XXV Synod of the Bishops of the Syro-Malabar Church, Session 1, held from 9 to 14 January 2017 in the Major Archiepiscopal Curia at Mount St Thomas, Kakkanad.

Dear Brothers and Sisters in Jesus Christ,

The XXV Synod, Session 1was held from 09 to 14 January 2017 in the backdrop of the Silver Jubilee of the Major Archiepiscopal status of the Syro-Malabar Church. The Synod began with the solemn installation of the relics of St. Thomas in the chapel of Mount St. Thomas.

The Synod paid homage to the deceased Bishop Emeritus of the eparchy of Kanjirappally, Mar Mathew Vattakuzhy. Synod extended an official welcome to Bp. Joseph Srampickal, Bishop of the eparchy of Great Britain and Bp. Stephen Chirappanath, the Apostolic Visitator in Europe, who were participating the synod for the first time officially.

The Synod was conducted during the days following Christmas after the usual time of the Priestly Ordination and First Holy Qurbana of our deacons. Altogether 308 deacons got ordained this year in the Syro-Malabar Church, 165 religious priests and 143 eparchial priests. Let us thank Jesus Christ, the eternal priest for this great gift!

The Synod always takes keen interest in the pastoral care of the migrants outside Kerala. The Synod discussed very seriously about the provisions for pastoral care of the migrants in the Chennai Region and other places in India, where there are no Syro-Malabar eparchies. The Synod expressed its concern about the challenges in the pastoral care of migrants in the Gulf Countries and other places in India outside Kerala and analyzed what had been done till now for the pastoral care of our faithful. It was decided to create a more organized and fruitful course of action on these matters.

Young People are the focal point of the next Synod of Bishops in Rome. Young People are our strength. Youth Apostolate in the eparchies should prepare plans to be active and available. Topics like our Priestly Formation, Empowerment of the laity, Social Service etc. were also discussed in the Synod. The necessity of improving the programme for priestly formation

to make it fruitful according to the need of the hour was discussed. In order to make it more scientific, the concerned commission is entrusted to establish a system of evaluation of the teaching methods of the professors in the Synodal seminaries.

Synod brought out an Ecumenical Directory which aims at strengthening the relationship between other Christian denominations. Considering the importance of lay apostolate, Synod fathers were of the opinion that the way should be prepared for a more active participation of the Laity in the Syro-Malabar Church through appropriate formation. In the light of Mission ad Gentes, several fathers pointed out the need of the mission oriented lay people becoming evangelizers. In the field of lay empowerment our Church still needs to make much progress. In this context, the activities of the lay missionary organizations are commendable. Synod also discussed about the methods for developing the organizational character of Cherupushpa Mission League.

The Syro-Malabar bishops who participated in the recently concluded FABC plenary assembly in Sri Lanka presented their report. As usual, the discussions of the previous Synod were followed up and the decisions were evaluated. In this regard, the Synod considered a handbook on environmental protection and Civic Culture prepared under the leadership of Bishop Thomas Chakiath, titled “Me and My Earth, Me and My Society” which discusses themes like eco developmental programmes and the partnership of Church in it. The handbook which also elaborates themes like Solar Energy, Water Pollution, Waste Management, Practice of Cleanliness etc., will be useful to everybody, especially to the youth and children. It would be very good if the book is promoted by the various eparchies in their parishes and associations.

The efforts and endeavours made by our eparchies to propagate and implement Amoris laetitia, the post-synodal apostolic exhortation of the Universal Church on family are laudable. Its reports from different eparchies are complied and sent to Rome. I take this opportunity to exhort you to strive to implement in the parish level all that is envisaged in the apostolic exhortation, since family life is one of the important elements of the life of Church.

Another subject considered in the Synod was the practice of Yoga. Recognizing the important place given to Yoga in Indian Culture, it is to be considered as a physical exercise or postures to concentrate or to meditate. It is not quite right to think that the experience of God

and the personal encounter with the Lord is possible through Yoga. The God in whom we believe is a Personal God. God is not someone who can be reached through a particular posture. Those who hold different opinions other than that of the Church in this regard are not to be encouraged. In this context, each one should take utmost care to avoid getting into those prayer groups and spiritual movements which are against the Catholic faith and do not recognize the official teachings of the Church.

Liturgical matters were also taken up by the Synod. Liturgical Ceremony for Betrothal was approved by the Synod. Even if the washing of feet on Maundy Thursday was widely discussed, it was advised by the Synod to follow the existing tradition. At the same time, the Synod entrusted the Commission for Liturgy to continue its study on the matter.

I am glad to inform you that at Paurastya Vidyapitham, Vadavathoor, a canon law faulty is being erected. As our Church is in the silver jubilee year of the status of being a Major Archiepiscopal Church, it is an occasion to go ahead in unity and solidarity. Let this jubilee be an occasion to improve on our missionary endeavours! In this jubilee year, let us try to recall the paths we travelled and commemorate the bishops who led the Church in its early days! It has been decided to organize an international seminar on the occasion of the jubilee.

Synod expressed its concern on the abduction of Fr. Tom Uzhunalil SDB by terrorists in Yemen. Prayers and adoration were offered during one of the days of the Synod at St. Mary's Cathedral Basilica, Ernakulam for his release. Synod decided to seek the help of the government to speed up the process of the release of Fr. Uzhunnalil.

Wishing you a lent of spiritual renewal, I remain

Yours cordially in Christ,
+George Cardinal Alencherry
Major Archbishop of the Syro-Malabar Church

Given from the Major Archiepiscopal Curia at Mount St. Thomas, Kakkanad, on 05 March 2017.

N.B. The contents of this circular shall be made known to the Priests, Religious and Laity of all the Archeparchies/Eparchies of Syro-Malabar Church.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் சுற்றுமடல்

## ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே மற்றும் சகோதரர் சகோதரிகளே, நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக!

புனித தோமையார் கத்தோலிக்கத் திருச்சபை என்று பரம்பரையாக அறியப்பட்டிருந்த நமது சபையானது, 1887ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் தேதி திருத்தந்தை பதிமூன்றாம் லியோ அவர்களால், 'சீரோ மலபார் திருச்சபை' என்னும் பெயருடன் உருவானது. இது புனித தோமையார் கிறிஸ்தவர்களை வராபுழா உயர் மறைமாவட்ட லத்தீன் கிறிஸ்தவர்களிலிருந்து வேறுபடுத்தி, திருச்சூர் மற்றும் கோட்டயம் ஆகிய இரு தனிப்பட்ட மறைவட்டங்களாக ஏற்படுத்தப்பட்டதாகும். இதைத் தொடர்ந்து ஜூலை 28, 1896ஆம் ஆண்டு சீரோ மலபார் திருச்சபையின் அதிகார எல்லையை மாற்றியமைத்து, திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் சங்ஙனாசேரி ஆகிய மூன்று அப்போஸ்தலிக்க மறைவட்டங்களாக ஏற்படுத்தி அவற்றிற்கு மூன்று ஆயர்களையும் நியமித்து திருத்தந்தை நமது சீரோ மலபார் திருச்சபையை ஒரு தனி கீழ்திசை திருச்சபையாக உருவாக்கினார்.

இத்திருச்சபையின் சீரான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, டிசம்பர் 21, 1923ஆம் ஆண்டு திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்கள், திருச்சூர், சங்ஙனாச்சேரி மற்றும் கோட்டயம் மறைவட்டங்களை உள்ளடக்கிய சீரோ மலபார் உயர்பேராயத்தை (எர்ணாகுளம் உயர் மறை மாவட்டம்) உருவாக்கினார். 21 மறை மாவட்டங்களை உள்ளடக்கிய இத்திருச்சபையானது, 1992 வரை எர்ணாகுளம் மற்றும் சங்ஙனாசேரி ஆகிய இரு உயர் மறை மாநிலங்களின் கீழ், திருத்தந்தையின் அதிகாரப் பார்வையில் செயல்பட்டது.

இறுதியாக திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் அவர்கள், 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாள் அப்போஸ்தோலிக்க திருத்தூது சாசனம் (Constitution) Quae maiori வாயிலாக

எர்ணாகுளம் & அங்கமாலி என்னும் உயர் மறைமாநிலத்தை கீழ்திசை திருச்சபைகளின் கானோனிக்க சட்டப்படி உருவாக்கினார். இதன் வாயிலாக, சீரோ மலபார் திருச்சபைக்கு உயர்பேராயரை வழங்கி அத்தோடு ஆயர்குழுவையும் (Syond) நியமித்து தனது இறைமக்களை விசுவாச வாழ்வில் வழிநடத்தும் முழு அதிகாரமும் இத்திருச்சபைக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், ஆயர்களை நிய மிக்கும் அதிகாரமும் ஆராதனை முறைகளை கையாளும் அதிகாரமும் திருத்தந்தையிடமே இருந்தது. 1999 டிசம்பர் 18ஆம் நாள் சீரோ மலபார் திருச்சபைக்கு தனது தந்தையும் தலைவருமான உயர் பேராயர் மார் வர்க்கி விதயத்தில் அவர்களை வழங்கி, அவருக்கு ஆராதனை முறைகளை கையாளும் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அத்தோடு இத்திருச்சபையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு 2003ஆம் -ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதி இச்சபைக்கு தமது ஆயர்களை நியமிக்கும் பொறுப்பை வழங்கி, திருத்தந்தை அவர்கள் இச்சபை தனித்திருச்சபையின் முழு அதிகாரத்தோடு செயல்படவும், மக்களை விசுவாச வாழ்வில் வழிநடத்தவும் அதிகாரம் வழங்கினார்.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் நாள் சீரோ மலபார் திருச்சபை உயர் மறைமாநிலமாக மாற்றப்பட்டு, ஒரு தனித் திருச்சபையின் அந்தஸ்தோடு தலைவரும் தந்தையுமான உயர்பேராயரை பெற்றதன் 25ஆம் யூபிலி ஆண்டை இவ்வருடம் நமது திருச்சபை கொண்டாடுகிறது. இவ்வெள்ளி விழாவை திருச்சபை மக்களாகிய நாமும், பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, நம் மறை மாவட்டத்திலும் இவ்விழாவை கொண்டாட முயற்சி எடுப்போம். அத்தோடு எப்போதும் நமது திருச்சபைக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் அதன் அனைத்து மறைப்பணிக்காகவும் இறைவனோடு செபிப்போம்.

சீரோ மலபார் தனித் திருச்சபையின் வெள்ளி விழா கொண்டாட்டமானது நமது மறைமாவட்டத்தில் கீழ் காணும் வகையில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

**நிகழ்வுகள்**

1. துவக்க விழா ஏப்ரல் 11, 2017 - மறைமாவட்ட அளவில்
   ஏப்ரல் 23, 2017 - பங்களவில்
2. திருப்பலிக்கிடையே திருச்சபைக்காக தனிப்பட்ட மன்றாட்டுகள் சொல்லுதல்.

3. சீரோ மலபார் திருச்சபை பற்றிய வினாடி வினா போட்டி நடத்துதல்.

(அனைத்து பக்த சங்கங்கள் மற்றும் உறவியங்களில்).

4. ஒரு ஏழை குடும்பத்திற்கு வெள்ளிவிழா நினைவு இல்லம் மறைமாவட்டம் சார்பாக கட்டுதல்.

5. பங்களவில் ஒரு ஞாயிறு அன்று வெள்ளிவிழா கொண்டாடுவது.

(அருங்காட்சியம் மற்றும் கலை நிகழ்ச்சிகளோடு).

6. நிறைவு விழா 2017 நவம்பர் 11 அன்று நமது மறைமாவட்ட தினத்தோடு சேர்ந்து நடைபெறும்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்,

✠மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச,
தக்கலை மறைமாவட்ட ஆயர்.

---

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| 05.04.2017 | இனையம் போராட்டம் |
| 08.04.2017 | +2 மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கம், புனித அல்போன்சா கல்லூரி சூசைபுரம் |
| 10.04.2017 | குருத்துவ இளநிலை அருட்பொழிவுகள் |
| 11.04.2017 | குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான ஒருநாள் தியானம், சங்கமம் |
| 12.04.2017 | திருத்தொண்டர் அருட்பொழிவு, பிலாங்கரை |
| 19.04.2017 | குருத்துவ அருட்பொழிவு - திருத்தொண்டர் வினு ஜோசப், காட்டாத்துறை |
| 20.04.2017 | குருத்துவ அருட்பொழிவு - திருத்தொண்டர் ஜாண் ஜோசப், காரோடு |
| 23.04.2017 | ஆயர் திருநிலைப்பாடு, அருட்தந்தை ஜோசப் தறயில், சங்ஙனாசேரி |
| 25.04.2017 | பல்வேறு இயக்கங்களுக்கிடையேயான கூட்டம் |

HOLY CHILDHOOD

# குழந்தை ஈசோ



"சிறு பிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்" (மாற்கு 9:37)

**மறைவட்ட கருத்தரங்கு**

சூசைபுரம் மறைவட்ட கருத்தரங்கானது மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் 18.03.2017 அன்று மதியம் 2.30 மணியளவில் இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறைவேண்டலுக்குப்பின் மாங்கரை குழந்தை ஈசோ இயக்க மழலை தென்சிகா வரவேற்புரை கூறினார்.

பாலப்பள்ளம் பங்குத்தந்தை அருட்தந்தை பிரின்டோ அவர்கள் செய்கைப் பாடல்கள், செபங்கள் வழியாக இறைவார்த்தைகளையும், நல்ல கருத்துக்களையும் பயிற்றுவித்தார். மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலெக்ஸ் அவர்களும் மழலைகளுக்கு அறிவுசார்ந்த கருத்துக்களை பகிர்ந்து நிகழ்விற்கான ஏற்பாடுகளையும் வழங்கினார். கிள்ளியூர் பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் வயலில் கலந்துகொண்டு சிறப்பித்தார். நிறைவாக சூசைபுரம் குழந்தை ஈசோ இயக்க பொறுப்பாளர் சகோதரி சுஜிகுமாரி நன்றி கூற மாலை 4.30 மணியளவில் நிறைவடைந்தது.

**பரிசுச்சீட்டு குலுக்கல் விழா**

25.03.2017 சனிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் மறைமாவட்ட பரிசுச்சீட்டு குலுக்கல் விழா கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை மிஜோ அவர்கள் கலந்து கொண்டு முதல் பரிசுச்சீட்டை தேர்வு செய்து குலுக்கல் விழாவை தொடங்கி வைத்தார்.

27.03.2017 திங்கட்கிழமை அன்று குலசேகரம் புனித ஜாண்பால் மெட்ரிக் பள்ளியில் வைத்து பள்ளிகளுக்கான குலுக்கல் விழா இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில்,
இயக்குநர்.

**தவக்கால பாடல்கள்:** தவக்காலத்தில், குறிப்பாக புனித வாரத்தில் பயன்படுத்தப்படும் பாடல்களை உள்ளடக்கிய இசைக் குறுந்தகடானது, அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்களின் அயராத உழைப்பால் மார்ச் 26, 2017 அன்று வெளியிடப்பட்டது.

## சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

சிறுமலர் MISSION LEAGUE

**தியானம்**

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் சூசைபுரம் மறைவட்ட தியானம் 26.03.2017 அன்று பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் வரவேற்க, பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் ஒளியேற்றி மிஷன் லீக் உறுப்பினர்களின் செயல்பாடுகள் பற்றி தொடக்க உரையாற்றினார். பின்னர் சி.எம்.சி, எப்.சி.சி, எஸ்.எ.பி.எஸ் அருட்சகோதரிகள் இறையழைத்தல் என்பது என்ன? இறையழைத்தலைப் பெறுவது எவ்வாறு? என்பது பற்றி பாடல்கள் செயல் விளக்கங்கள் வழியாக எடுத்துரைத்தார்கள்.

பின்னர் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் இறையழைத்தல் தெய்வீகக் கொடை, என தனக்குக் கிடைத்த இறையழைத்தல் வழியாக மாணவர்களை சிந்திக்க வைத்தார்.

அருட்தந்தை ஷோஜோ
இயக்குநர்

---

## தவக்கால தியானமும், தானமும்

தவக்காலத்தை முன்னிட்டு குமரி மாவட்டத்திற்குட்பட்ட நான்கு கத்தோலிக்க மறைமாவட் டங்களுக்குமான ஒருநாள் தியானம் மார்ச் 29 அன்று வெட்டுவெந்தி புனித அந்தோணியார் திருத்த லத்தில் திருத்தல அதிபர் அருட்பணி. அருள் தேவதாசன் அவர்களின் வரவேற்புடன் காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தன் இரத்தத்தை முதல் நபராக கொடுத்து இரத்ததான நிகழ்வை தொடங்கி வைத்தார். 'இரத்த தானம் அவசியம் தேவை' என்ற தலைப்பில் ஆசாரிப்பள்ளம் இரத்த வங்கி தலைமை அதிகாரி மருத்துவர் கரோலின் கீதா அவர்கள் முதல் அமர்வை நடத்தினார். குழித்துறை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜெரோம் தாஸ் அவர்கள் வாழ்த்துரையாற்றி சிலுவை தியானத்தை தொடங்கி வைத்தார். 'சிலுவை அடையாளமல்ல வாழ்க்கை முறை என்ற சிந்தனையில் தானம் இயக்க நிறுவனரும், இந்தியாவின் இரண்டாம் குருதி கொடையாளரும், 189 முறை குருதியை தானமாக வழங்கியவருமான அருட்பணி. ஜெரி சே.ச அவர்கள் தியான உரையாற்றினார். மதிய உண வுக்குப்பின் திருச்சிலுவைப் பாதையும் நடைபெற்றது. நமது மறைமாவட்டம் சார்பில் அருட்பணி. பெலிக்ஸ் அவர்கள் நிகழ்வினை ஒருங்கிணைத்து வழிநடத்தினார். இந்நிகழ்வில் 30க்கும் மேற்பட்ட குருக்கள், அருட்சகோதரிகள் உட்பட 71 பேர் இரத்ததானம் செய்தனர்.

அருட்பணி. பெலிக்ஸ், ஒருங்கிணைப்பாளர்



FAMILY APOSTOLATE

# குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மதுஅடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும், குடும்ப ஆற்றுப் படுத்துதலும் நடைபெற்று வருகிறது. ஹோம் மிஷன் சந்திப்பின் தொடர்சியாக குடும்ப பணியாளர்கள் தற்போது மாலைக் கோடு பங்கில் இல்லங்களை சந்தித்து வருகிறார்கள்.

### திருமண தயாரிப்புப் பயிற்சி

மார்ச் மாதம் நடைபெற்ற பயிற்சியில் 30 இளையோர்கள் பங்கேற்றனர். அருட்சகோதரி மேரிஜாய்ஸ், செல்வி. சுதா மாலைக்கோடு ஆகியோர் பயிற்சியை வழி நடத்தினர். அடுத்தப் பயிற்சி மே 19 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 21 மாலை 4.00 மணிக்கு நிறைவுபெறும்.பயிற்சிக்கட்டணம் ரூ.750.

### மாதர் ஜோதிஸ்

2017 ஆம் ஆண்டின் செயல்பாட்டு வழிமுறை அனைத்து அலகுகளுக்கும் வழங்கப்பட்டது. கிடைக்காதவர்கள் அலுவலகத்தை அணுகவும். சூசைபுரம் மறைவட்ட மாதர் ஜோதிஸ் கூடுகை மார்ச் 25 மாங்கரை பங்கில் நடைபெற்றது. 75 தாய்மார்கள் பங்கேற்றனர்.

### வந்து பாருங்கள் செபக்குழு

வந்து பாருங்கள் செபக்குழுவின் 117ஆவது ஒருநாள் தியானம் பளுகல் பங்கில் மார்ச் 11 அன்று நடைபெற்றது. அடுத்த தியானம் ஏப்ரல் 8 சனிக்கிழமை நடைபெறும்.

### தசாம்ச கிளப்

தசாம்சா கிளப்பின் மார்ச் மாதக் கூடுகைமணிவிளை திரு. ஜார்ஜ் ஜோசப் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. ஏப்ரல் மாதக் கூடுகை திரு. ஜார்ஜ் குமார்அவர்கள்இல்லத்தில் நடைபெறும்.

### தந்தையர் நல்வாழ்வு இயக்கம்

தந்தையர் நல்வாழ்வு இயக்கம் தொடங்கப் படாத இடங்களில் பங்குத் தந்தையர்கள் உடனடியாக தொடங்கி செயல் படுத்தவும். மாலைக்கோடு அலகில் மாதத் திற்கொருமுறை உறுப்பினர் ஒருவர் இல்லத்தில் கூட்டம் நடைபெற்று வருகிறது. கடந்தமாதம் நடைபெற்ற கூடுகையில் எய்ட்ஸ் நோயாளி ஒருவருக்கு இல்லம் அமைத்துக்கொடுக்க தீர்மானிக்கப் பட்டது..

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம், இயக்குநர்.

VINCENT-DE-PAUL வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## தவக்கால தியானம்

தக்கலை மத்தியசபையின் இறையோடு ஒருநாள் என்னும் சிந்தனையில் தவக்கால தியானம் மார்ச் மாதம் 19 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய அரங்கில் பேரருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்களின் திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மத்தியசபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் ஒப்புரவு பற்றிய தியான உரை வழங்கினார். அருட்தந்தை பிரின்டோ அவர்கள் ஆராதனை நடத்த ஒப்புரவு அருளடையாளம் வழங்கப் பட்டது. மதிய உணவுக்குப்பின் அருட்தந்தை தவக்கால ஒறுத்தல் பற்றி அருட்தந்தை மிஜோ அவர்கள் உரையாற்றினார். பாடல்களை கொல்லங்கோடு சகோ. ஜெயன் அவர்கள் வழங்கினார். அனைத்து கிளைச்சபைகளிலிருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சூசைபுரம் வட்டார சபை

சூசைபுரம் புனித மேரி பெண்கள் கிளைச்சபை ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் வழிகாட்டலுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கிளைச்சபை சார்பில் சுயதொழில் செய்வதற்கான திட்ட உதவி 12.03.2017 அன்று ஆன்மீக இயக்குநர் அவர்களின் பரிந்துரைப்படி 13 நபர்களுக்கு ரூபாய் 5000/- வீதம் ரூபாய் 65,000/ வழங்கப்பட்டது. வட்டாரசபைத் தலைவர் சகோ. சோனிக் அவர்கள் திட்ட உதவியை வழங்கினார். நிகழ்வை கிளைச்சபைத் தலைவர் சகோ. மரிய றோஸ்லி மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## ஏழை மாணவர் கல்வி நிதி திட்டம்

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆண்கள் கிளைச்சபை யினர் தற்போது ஏழை மாணவர் கல்வி நிதி திட்டம் ஒன்றை புதிதாக தொடங்கியுள்ளனர். இதன் பொறுப்பாளராக சகோ. அருள் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். உறுப்பினர்கள் தங்கள் இல்லங்களில் அல்லது தங்களைச் சார்ந்து நடைபெறும் ஆடம்பர திருமணம், பிறந்தநாள் போன்ற கொண்டாட்டங்களை குறைத்து அதன் வழியாக கிடைக்கும் தொகையை இந்நிதித்

திட்டத்திற்காக சேகரிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது 2500/- ரூபாய் நிதி கிடைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாலயத்தில் செயல்படும் மூன்று கிளைச்சபைகள் இணைந்து புற்றுநோயாளி ஒருவருக்கு மருத்துவ உதவியாக ரூ4000/- வழங்கினர்.

**மருத்துவ உதவி**

பிலாங்கரை வின்செந்தியர்கள் நெய்யூர் மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வரும் புற்றுநோயாளி ஒருவரை சந்தித்து ரூ.2500/- உதவி வழங்கினர்.

**படந்தாலுமூடு வட்டார சபை**

**பொன்விழா நிறைவில்..**

படந்தாலுமூடு வட்டார சபையின் கீழ் செயல்படும் படந்தாலுமூடு திரு இருதய கிளைச்சபை 11.2.1967 அன்று தொடங்கப் பட்டது. இதன் 50 ஆண்டு நிறைவு விழா மார்ச் 12 அன்று காலை ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கி, குருகுல முதல்வர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டத்துடன் நடைபெற்றது. விழாவில் பொன்விழா நினைவு மலர் வெளி யிடப்பட்டதோடு, கிளைச்சபைக்காக உழைத்த முன்னாள் வின்செந்திய உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். நிறைவில் அன்பு விருந்தும் வழங்கப்பட்டது..

சகோ. ஷாஜன்,
செய்தித்தொடர்பாளர்.

## BIRTHDAYS AND FEASTDAYS OF REV FATHERS

| BIRTHDAY | APRIL | | FEAST DAY |
|---|---|---|---|
| **Bp. George Rajendran SDB** | **14** | **13** | **Bp. George Rajendran SDB** |
| Fr. Antony Madappurackal | 01 | 13 | Fr. Geo Choozhikunnel |
| Fr. Abin Poovathummoottil | 01 | 13 | Fr. George Panamthottam CMI |
| Fr. Jimmy Thekkekadumathil | 04 | 13 | Fr. Rony Peedikayil MCBS |
| Fr. Ajeesh Attiyil | 08 | 13 | Fr. Sumesh Valliyamthadathil |
| Fr. Josy Puthenpurackal | 10 | 13 | Fr. Jipson Chully MCBS |
| Fr. Dency Mundunadackal | 14 | | |
| Fr. Jacob Aiyammathra | 24 | | |

# அருட்சகோதரர்களிடமிருந்து...

## விடுமுறையில் அருட்சகோதரர்கள்

பயிற்சித் தேர்வுகளை நிறைவு செய்த அருட்சகோதரர்கள் தங்கள் விடுமுறைக்காக மார்ச் 18 மற்றும் ஏப்ரல் 1 ஆகிய நாட்களில் தங்கள் இல்லம் வந்தடைந்தனர். பெங்களூர் மற்றும் சத்னா குருத்துவக்கல்லூரிகளில் தேர்வுகள் தற்போது நடைபெற்று வருகிறது. அங்குபயிலும் அருட்சகோதரர்கள் ஏப்ரல் 7 மற்றும் 13 அன்று தங்கள் இல்லங்களுக்கு வந்து சேருவார்கள்.ஏப்ரல் 7ஆம் நாளன்று அருட்சகோதரர்கள் சங்கமத்தில் ஒன்று கூடுவர். பின்னர் புனித வார நிகழ்வுகளுக்காக பல்வேறு பங்குகளுக்கு அனுப்பப்படுவர். தொடர்ந்து வேலைவாய்ப்பு முகாம், திருப்பட்ட நிகழ்வுகள் மற்றும் விசுவாச பயிற்சிப் பள்ளி நிகழ்ச்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

## குருத்துவ அருட்பொழிவு

இவ்வாண்டு மறை மாவட்டத்திற்காக இரு திருத்தொண்டர்கள் குருக்களாக அருட்பொழிவு செய்யப்பட இருக்கிறார்கள். திருத்தொண்டர் வினு ஜோசப் அவர்கள், காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலயத்தில் வைத்து, ஏப்ரல் 19, 2017 காலை 9.15 மணிக்கும், திருத்தொண்டர் ஜான் ஜோசப் அவர்கள் காரோடு, புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து ஏப்ரல் 20, 2017 அன்று காலை 9.30 மணிக்கும் அருட்பொழிவு செய்யப்பட இருக்கிறார்கள்.

## திருத்தொண்டர் அருட்பொழிவு

சூசைபுரம் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் தோமஸ் ஜெபனேஷ் லாசர் அவர்கள் ஏப்ரல் 12, அன்று பிலாங்காலை லொரேட்டோ மாதா ஆலயத்தில் வைத்தும், சங்ஙனாசேரி உயர்மறைமாவட்டம், துருத்திப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் சுபின் ஸ்கரியா புத்தன்புரைக்கல் அவர்கள், ஏப்ரல் 28 அன்று உரோமையில், மாத்தர் எக்ளேசியா குருமடத்தில் வைத்தும் திருத்தொண்டராக அருட்பொழிவு பெறுகிறார்கள். ஏப்ரல் 10 ஆம் நாள் அருட்சகோதரர் றோபின் அவர்கள் காறோயாவாக திருநிலைப்படுத்தப்படுகிறார்.

## இதய அஞ்சலி

உஜ்ஜயின் குருத்துவக் கல்லூரியில் பயிலும் அருட்சகோதரர் அமான்டோ அவர்களின் தந்தை மார்ச் 29ஆம் நாளன்று மாரடப்பால் இறையடி சேர்ந்தார். அவரது ஆன்மா இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு, துயரத்தால் வாடும் அக்குடும்பத்தினருக்கும் அஞ்சலியையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அருட்சகோ. ஜெபனேஷ்,
குருமாணவர் தலைவர்

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமுகசேவை சங்கம் (KKSSS)

## முப்பெரும் விழா

"Be Bold for Change" என்னும் உலகளாவிய பெண்கள் தினத்தின் மையகருத்தை மையமாக வைத்து கன்னியாகுமாரி சமுகசேவை சங்கம் சார்பில் வட்டார அளவில் பெண்கள் தினம் சுயஉதவி குழுக்களின் ஆண்டு விழா மற்றும் அன்னை தெரசா நோய் தணிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளின் தொடக்கவிழா ஆகிய முன்று விழாவும் சோ;த்து முப்பொரும் விழாவாக மார்ச் 5,6,8,11,12 ஆகிய தினங்களில் (ஐந்து நாட்கள்) கொண்டாடப் பட்டது. இதற்கு தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு. பிறின்ஸ் M.L.A, பத்மனாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு மனோ தங்கராஜ் M.L.A, ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். இதில் 426 சுயஉதவி குழுக்களிலிருந்து சுமார் 8600 மேற்பட்ட பெண்கள் கலந்து கெண்டு பல்வேறு இடங்களில் கலைநிகழ்சிகளை நடத்தினார்கள். இந்நிகழ்வில் சமூக பணியில் ஆர்வமுள்ள பெண்களை கௌரவிக்கும் நோக்கத்துடன் சிறந்தபெண் சமுக சேவையாளர் விருது ஆறு நபர்களுக்கு அளிக்கப்பட்டது.



நஞ்சில்லா வேளாண்மை மற்றும் வீட்டு தோட்டம் போன்றவற்றை பெண்கள் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக வீட்டுத் தோட்டம் அமைத்த 11 சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு விருது அளிக்கப்பட்டது. விருதினையும் கலைநிகழ்சிகளில் பங்கேற்புகான பரிசினையும் மேதகு ஆயர் அவர்கள் வழங்கினார்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில் ச.ச, இயக்குநர்

# புனித அல்போன்சா கலைமற்றும் அறிவியல் கல்லூரி

## கல்லூரி ஆண்டுவிழா

கல்விப் பணியில் தன் பணியை திறம்பட செய்து கொண்டிருக்கும் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆண்டுவிழா 2017 மார்ச் 18 ஆம் நாளன்று சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி நிறுவனரும் தக்கலை மறைமாவட்ட ஆயருமான மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்கள் ஆண்டுவிழா மலரை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக பதிவாளர் முனைவர் ஜாண் டி பிரிட்டோ அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து "தன் துன்பம் பொருட்படுத்தாது பிறர்க்கு உதவி செய்து வாழ்தல் வேண்டும்" என்ற அரிய கருத்துக்களை பதிவுசெய்து, பல்கலைக் கழகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜாண் போஸ்கோ அவர்கள் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். கல்லூரி மேலாளர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில், தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள், மறைமாவட்ட பிரதிநிதிகள் என பலர் வருகை தந்து சிறப்பித்தனர். வருகை தந்த அனைவரையும் கல்லூரி துணைமுதல்வர் முனைவர் ஜாண் அவர்கள் வரவேற்றார். தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் ஷீமாமோள் நன்றி கூறினார். இறுதியில் தேசிய கீதம் இசைக்க விழா இனிதே நிறைவடைந்தது.

## கல்லூரி விளையாட்டுவிழா

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் விளையாட்டு விழா 2017 மார்ச் 10, 11 ஆகிய நாட்களில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜாண் போஸ்கோ அவர்கள் முன்னிலை வகித்தார். தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். குளச்சல் சரக காவல்துறை துணை கண்காணிப்பாளர் திருமதி சாய் சரண் தேஜஸ்வி ஐ.பி.எஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடக்க உரையாற்றினார். கல்லூரி மாணவர்கள் நான்கு அணியாக போட்டிகளில் விளையாடினர்.

இரண்டாம் நாள் விழா கல்லூரி முதல்வர் தலைமையில்

நடைபெற்றது. பொறியாளர் நாஞ்சில் ஜி டொமினிக் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கபடி, கிரிக்கெட், தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், வட்டு எறிதல், உயரம் தாண்டுதல், 5000, 3000, 800, 400, 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார். உடற்கல்வி இயக்குநர் திரு. ஷீலன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் கல்லூரி பேராசிரியர்களும், மாணவர்களும், பணியாளர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ்,

தாளாளர்

## வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சார்பில், +2 முடித்த மாணவர்களுக்கான ஒருநாள் வாழ்க்கை வழிகாட்டி முகாம், மார்ச் 08, 2017 அன்று கல்லூரி அரங்கத்தில் வைத்து நடைபெற இருக்கிறது.

## இதர செய்திகள்

**குருக்களுக்கான இருநாள் கருத்தரங்கம்**

தக்கலை மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்களுக்கான இருநாள் கருத்தரங்கு, மார்ச் 21-22, (2017) தேதிகளில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. ஊட்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஞானதாஸ் அவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்தார். இவர், உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்தல் துறைகளில் பிரபலமானவர். பன்முகம் கொண்ட குருத்துவ அடையாளம் மற்றும் குருத்துவப்பணியில் கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த பார்வையைக் குறித்து மிக விளக்கமாகப் பேசினார்.

**குருக்கள், அருட்சகோதரிகளுக்கான ஒருநாள் தியானம்**

பெரிய வியாழன் அன்று, ஆண்டவர் இயேசு, நற்கருணை நிறுவியதையும் குருத்துவம் ஏற்படுத்தியதையும் நினைவு கூருகிறோம். ஆண்டவரின் இவ்வரிய கொடைகளுக்காக நன்றி செலுத்தவும் தியானிக்கவும், ஏப்ரல் 11, 2017 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து ஒருநாள் நிகழ்வாக தியானமும் திருப்பலியும் நடைபெறுகிறது. காலை 9 மணிக்குத் தொடங்கும் இந்நிகழ்வு மாலை 3 மணிக்கு நிறைவடையும்.

# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

**உலக மகளிர் தினம்**

உலக மகளிர் தினமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. அதை முன்னிட்டு, தக்கலை மறைமாவட்டம் முழுவதுமாக உள்ள அனைத்து ஆலயங்களிலும், மார்ச் 5, 2017 அன்று சிறப்பு செபங்கள் நடைபெற்றன. 'மாற்றம் காண மனத்திடன் கொள்' என்னும் தலைப்பின் கீழ், கன்னியாகுமரி சமூக சேவை சங்கமும் பிராந்திய வாரியான மகளிர் தின சிறப்பு நிகழ்வுகளை ஆறு இடங்களில் நடத்தியது. சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களாக உள்ள பெருவாரியான பெண்கள் இந் நிகழ்வுகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள்.

**மறை மாவட்டங்களுக்கிடையேயான கூட்டம்**

சங்ஙனாசேரி உயர் மறைமாவட்டத்தின் கீழ் வருகின்ற நான்கு மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம் மார்ச் 14, 2017 அன்று, காஞ்ஞிரப்பள்ளி, அமலா கல்லூரியில் வைத்து நடைபெற்றது. நம்முடைய மறை மாவட்டத்திலிருந்து, பல்வேறு இயக்கங்களின் இயக்குநர்களாக செயல்படும் 7 அருட்தந்தையர்களும் ஆயரும் பங்கேற்றார்கள். திருச்சபைக்கு சொந்தமான அசையா மற்றும் அசையும் சொத்துக்களை கட்டுப் படுத்தும் அரசின் புதிய நடவடிக்கைகள் குறித்த விவாதம் நடைபெற்றது. மேலும், அருட்பணியின் போது கவனத்தில கொள்ள வேண்டிய இதர காரியங்கள் குறித்த விவாதங்களும் நடைபெற்றன. விவாதங்களை, சங்ஙனாசேரி உயர் மறைமாவட்டத்தின் பேராயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்கள் நெறிப் படுத்தியதோடு தலைமை உரையையும் நிகழ்த்தினார்.

**சீனாய் தியான இல்ல தொடக்கவிழா**

மறைமாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தியானங்களை நடத்தி வரும் சீனாய் நற்செய்திப் பணி புதிய நிலையை எட்டியுள்ளது. இப்பணியை நிரந்தரம் ஆக்கும் நோக்கில் தியான இல்லமானது, கல்லுவிளையில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பணிகள் முடிவடையும் தருவாயை எட்டியுள்ளன. இதன் தொடக்கவிழா, மே மாதம் 7 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. இதில், சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். டிவைன் தியான இல்லத்தில் பலமொழிகளில் புலமைபெற்ற சகோ. ஜோசப் மாரியோ அவர்கள் அன்றைய ஒருநாள் தியானத்தை வழிநடத்துகிறார்.

**அருள தூது –** இது திருச்சபையின் குரல்

தக்கலை மறைமாவட்டத்தின் திருத்தொண்டுப் பணியை விரிவாக்கும் நோக்குடன் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். ஆண்டவரின் வார்த்தைகளை மக்களின் மத்தியில் எடுத்துச் செல்வதில் ஊடகம் பெரும் பங்கு வகிக்கிறது என்னும் உண்மையை கருத்தில் கொண்டு, இறையியல், திருச்சபைத் தந்தையரின் படிப்பினைகள் மற்றும் கிறிஸ்தவ வாழ்வு சம்மந்தமான மூன்று வெளியீடுகள் மறைமாவட்டம் சார்பில் வெளிவருகின்றன. அத்தோடு, தற்போது கத்தோலிக்க சபை சம்மந்தமான செய்திகளை உள்ளடக்கிய மாதாந்திர செய்தித்தாள் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அருள் தூது என்னும் பெயரில் வெளிவரும் இவ்விதழ், அருட்பணிக்கான புதிய தளங்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இது வெளிவர உழைத்த அனைவருக்கும் வாழ்த்துகளும் செபங்களும்

**தியானஉரை மற்றும் மாயாஜாலம்**

தவக்காலத் தயாரிப்பின் பகுதியாக, நம்முடைய மறைமாவட்டத்திற்கு உட்பட்ட ஆறு மறைவட்டங்களிலுமாக, மறைமாவட்ட அருட்பணிப்பேரவையின் ஆன்மீகக் குழு சார்பாக மார்ச் 26-30 (2017) தேதிகளில் மாயாஜாலங்களின் உதவியுடன் தியான உரையானது, திரு. ஜேம்ஸ் முக்குடம் அவர்களால் நடத்தப்பட்டது. முற்றிலும் வித்தியாமாக அமைந்த இந்நிகழ்வு இறைமக்கள் மனதில் பதியும் விதத்தில் அமைந்தது. நிகழ்வை, அருட்தந்தை ஜோசப் நெடும்புறம் மற்றும் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

---




"இந்த புனித வாரத்தில் இயேசுவை நோக்கி நம் பார்வையைத் திருப்பி, நமக்காக இயேசு மேற்கொண்ட தியாகத்தின் மறையுண்மையை, மேலும் சிறப்பாக புரிந்துகொள்வதற்குத் தேவையான அருளை வேண்டுவோம்"




"உலக நிலக்கண்ணி வெடிகள் குறித்த விழிப்புணர்வு தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், நிலக்கண்ணிவெடிகளற்ற ஓர் உலகைக் கட்டியெழுப்புவதற்குரிய நம் அர்ப்பணத்தை மீண்டும் புதுப்பிப்போம்"

# மறைவட்ட செய்திகள்

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### ஆலய வாசல் நிறுவுதல்

* களியல் புனித மரியன்னை ஆலயத்தில் 19.3.2017 சூசையப்பர் திருநாளன்று புது ஆலயத்திற்கான வாசல் நிறுவப்பட்டது. 26.03.2017 தவக்கால தியானமும் ஒரு மணி நேர ஆராதனையும் நடைபெற்றது.

### சூசையப்பர் திருநாள்

* பென்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தில் சூசையப்பர் திருநாள் பங்குத்தந்தை ஷோஜி அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப் பட்டது, அனைவருக்கும் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது.

### நற்செய்தி பெருவிழா

* மஞ்சாலுமூடு மறைவட்ட 15 வது நற்செய்திப் பெருவிழா மார்ச் மாதம் 25, 26 ஆகிய நாட்களில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி நற்செய்திப் பெருவிழாவைத் தொடங்கி வைத்தார். முதல் நாளன்று அருட்தந்தை வர்க்கீஸ் மேக்கோடு அவர்களும், இரண்டாம் நாளன்று அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் அவர்களும் செய்தி வழங்கினர்.

### இளைஞர் கருத்தரங்கு

* 11.3.2017 மதியம் 2-30 மணியளவில் மஞ்சாலுமூடு மறைவட்ட இளைஞர் கருத்தரங்கு நடைபெற்றது. மறைமாவட்ட இளைஞர் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் செய்தி வழங்கினார்.

### சிலுவைப்பாதை

* மாறப்பாடி ஆலயத்தில் வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதைக்கு பின் உறவியங்கள் சார்பில் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது. உறவியங்கள் வாரியாக ஒவ்வொரு இல்லங்களிலும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது.

* 26.03.2017 அருட்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

### பாலர்பள்ளி ஆண்டுவிழா

* 28.03.2017 அன்று அருட்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் மாறப்பாடி பாலர்பள்ளியின் ஆண்டுவிழா நடைபெற்றது. சிறார்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

### வினாடி வினா

* முக்கூட்டுக்கல் ஆலயத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கு ஞாயிறு தோறும் நீங்கள் செபிக்கும் போது என்ற புத்தகத்திலிருந்து வினாடி வினா நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

* 1.4.2017, 2.4.2017ஆகிய நாட்களில் முக்கூட்டுக்கல் ஆலயத்தில் தவக்கால தியானம் நடைபெறும்.

**மதாடா சநதபபு**

* மாலைக்கோடு ஆலயத்தில் ஹோம் மிஷன் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக உறவியங்களில் தொடர் சந்திப்பு மார்ச் 4 முதல் 7 வரை நடைபெற்றது.

* தவக்கால தியானம் ஏப்ரல் 5,6,7,8 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

* மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் ஜல்லிக்கட்டு பற்றிய பட்டிமன்றம் நடத்தினர்.

**நற்செய்திப் பெருவிழா**

* தவக்காலத்தை முன்னிட்டு முழுக்கோடு பங்கில் அனைத்து உறவியங்களிலும் நற்செய்தி கூட்டங்கள் நடைபெற்றன. அதற்கு தயாரிப்பாக முந்தைய தினங்களில் அருட்தந்தையர்கள் சாக்கோ ஆக்காத்தற, செபாஸ்டின், சாக்கோ பேசில் மற்றும் அருட்சகோதரிகள் சூனா றோஸ், பாவனா ஆகியோர்கள் அனைத்து இல்லங்களையும் சந்தித்து செபித்தனர்.

* 01.03.2017 அன்று புனித அல்போன்சா உறவியத்திலும் 21.3.2017 அன்று புனித மரியன்னை மற்றும் அந்தோணியார் உறவியத்திலும் நடைபெற்ற தியானத்தை அருட் தந்தை பிரின்டோ அவர்கள் வழிநடத்தினார்.

* 13.3.2017 அன்று புனித சேவியர் மற்றும் தோமையார் உறவியத்தில் நடைபெற்ற தியானத்தை அருட்தந்தை அலக்ஸ் அவர்கள் வழிநடத்தினார்.

*14.3.2017 அன்று புனித அன்னைத் தெரசா மற்றும் லூர்து அன்னை உறவியத்தில் நடைபெற்ற தியானத்தை அருட்தந்தை மிஜோ அவர்கள் வழிநடத்தினார்.

* 19.3.2017 அன்று புனித சாவறா மற்றும் ஜார்ஜியார் உறவியத்தில் நடைபெற்ற தியானத்தை அருட்சகோதரர் பிரைட் அவர்கள் வழிநடத்தினார்.

## சூசைபுரம் மறைவட்டம்

சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலயத்தில் 17.03.2017அன்று பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் மகளிர் தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**புனித சூசையப்பர் திருவிழா**

01.03.2017 முதல் 19.03.2017 வரை சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலயத்தில் அனைத்து குடும்பங்களிலும் நவநாள் செபம் சொல்லப்பட்டது. திருவிழா நாளன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் சிறப்புத்திருப்பலி நடைபெற்றது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் மறையுரை வழங்கினார். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயத்தில் சூசையப்பர் திருநாள் சிறப்பாக திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. சூசையப்பர் பெயர் கொண்டவர்கள் அனைவரும் பங்குத்தந்தையோடு இணைந்து கேக் வெட்டி சிறப்பித்தனர். சூசையப்பரின் வரலாறு பற்றிய கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

### மேஜிக் ஷோ

26.03.2017 அன்று சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரி அரங்கத்தில் மேஜிக் ஷோ வழியாக இறைவார்த்தைப் பகிர்தல் நிகழ்வு பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சூசைபுரம் மறைவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தலைவாசல் மந்திரித்தல்

தக்காளிவிளை திருக்குடும்ப



ஆலய அடித்தளப் பணி நிறைவடைந்த நிலையில் அதன் அடுத்த கட்ட கட்டுமானப்பணியான கட்டளை (தலைவாசல்) நாட்டல் 25.03.2017 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் முன்னின்று செப வழிபாடுளை நடத்தினார்.

### இறையழைத்தல் முகாம்

26.03.2017 அன்று பாலப் பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் சிறுமலர் இயக்க மாணவர் களுக்கான இறையழைத்தல் முகாம் நடைபெற்றது. அருட் தந்தையர்கள் ஷோஜோ, ஜோஸ் வயலில், ஜெஸ்டின் செறுவேலில் ஆகியோர்கள் வகுப்புகளை நடத்தினர்.

### மாதர் ஜோதிஸ் கருத்தரங்கு

25.03.2017 அன்று மாங்கரை புனித வியாகப்பர் ஆலய வளாகத்தில் மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் நெடும்புறம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு, அருட்தந்தை அஜீஷ் அட்டியில் ஆகியோர்கள் கருத்தரங்கை வழிநடத்தினர்.

### ஆராதனை

பிலாங்கரை புனித லொரேட்டோ அன்னை ஆலயத்தில் தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வியாழக்கிழமைகளிலும் நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது.

### தவககாலத திருபபயணம

29.03.2017 அன்று கிள்ளியூர் புனித தேவமாதா, மாதாபுரம் புனித தோமையார் மற்றும் மாங்கரை புனித வியாகப்பர் இறைமக்கள் 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டனர்.

### சிலுவைப்பாதையில் ஆயரின் பங்கேற்பு

* மாதாபுரம் ஆலயத்தில் செவ்வாய்கிழமைகளிலும் மற்ற அனைத்து ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளிலும் சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது. 31.03.2017 அன்று கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் நடைபெற்ற சிலுவைப்பாதை நிகழ்வில் ஆயர் அவர்கள் கலந்து கொண்டார்.

* மாங்கரை ஆலயத்தில் அனைத்து உறவியங்களிலும் வீடுகள் வாரியாக சிலுவைப்பாதை நடத்தப்பட்டது.

### பங்குப்பேரவை கூட்டம்

* 12.03.2017 அன்று மாங்கரை மற்றும் பாலப்பள்ளம் ஆகிய பங்குகளில் பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

* பாலப்பள்ளம் பங்குப் பிரதி நிதிகள் கூட்டத்தில் நர்சரிப் பள்ளி தொடங்குவது பற்றி தீர்மானிக்கப்பட்டது. ஆசிரியர் கூட்டத்தில் ஒப்புரவு அருட்சாதனத்தில் மறைக்கல்வி மாணவர்களை தயாரிப்பது பற்றி பேசப்பட்டது.

## நித்திரவிளை மறைவட்டம்

### தவக்கால தியானம்

வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் தவக் காலத்தின் 2ஆம் ஞாயிறன்று இரக்கத்தை மையப்படுத்தி என்னென்ன அறச்செயல்கள் செய்லாம் என்ற சிந்தனையில் ஒருநாள் தியானம் நடைபெற்றது. நற்கருணை ஆராதனை, தியான உரை, ஒப்புரவுஉ அருளடையாளம் ஆகியன நடைபெற்றன.

### ஆயர் சந்திப்பு

26.03.2017 அன்று ஆயர் அவர்கள் வயலின்கரை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி அனைத்து இயக்கங்களையும் பார்வையிட்டு உரையாடி ஆலோசனைகளையும் வழங்கினார்.

### சூசையப்பர் திருநாள்

நித்திரவிளை ஜெயமதா ஆலயதில் சூசையப்பர் திருநாள் 11.03.2017 அன்று சூசையப்பர் பெயர் கொண்ட முன்னாள் பங்குத்தந்தை அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். தந்தையின் பெயர் கொண்ட திருநாளும் சிறப்பிக்கப் பட்டது. அனைவருக்கும் இனிப்பும் வழங்கப் பட்டது.

### இன்பச்சுற்றுலா

* ஜெயமாதா பாலர் பள்ளி மற்றும் கருணை இல்ல

மாற்றுத்திறனாளிகளின் இன்பச் சுற்றுலாவும் நடைபெற்றது. பங்குமக்களும்

* தவக்காலத்தை முன்னிட்டு பங்குமக்கள் 14 திருத்தலங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு சிலுவைப்பாடுகளை தியானித்தனர்.

**தவக்கால தியானம்**

* கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் தவக்கால தியயனம் 11.03.2017 அன்று காலை 9.30 மணிக்கு செபமாலை மற்றும் திருப்பலியுடன் ஆரம்ப மாகி மாலை 4 மணி வரை நடைபெற்றது. இறைவார்த்தை தியானம், பகிர்தல், ஒப்புரவு, மற்றும் நற்கருணை வழிபாடு ஆகியன நடைபெற்றன.

*உறவியங்களிலும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் சிலுவைப் பாதையை பக்த இயக்கங்கள் தலைமையேற்று வழிநடத்தி வருகின்றன.

**யூதித்து போறம்**

கணவரை இழந்த கைம்பெண்கள் மனம் தளர்ந்து இல்லங்களில் முடங்காமல் யூதித்துப் போன்று துணிவோடு செயல்பட வேண்டும் என்ற சிந்தனையில் தொடங்கப் பட்டதே இந்த யூதித்து போறம் என்ற அமைப்பு. இதன் முதல் கூட்டம் முஞ்சிறை அன்பகத்தில் நடைபெற்றது. அருட்தந்தை அஜீஷ் அவர்கள் ஒளியேற்றி தொடங்கி வைத்து, சிறப்புத் திருப்பலியும் நிறைவேற்றினார். அருட்சகோதரி தீபா எஸ்.டி அவர்கள் யூதித்தின் வாழ்க்கையை மேற்கோள் காட்டி விளக்க உரையாற்றி சங்கிலி செபமாலையின் முக்கியத் துவத்தையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து இதன் பொறுப்பா ளர்களாக திருமதி கிரிசாந்து மேரி, திருமதி அஞ்சு ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கூட்டம் ஒவ்வொரு மாதம் இரண்டாம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அன்பகத்தில் நடைபெறும் என்று தீர்மானிக்கப் பட்டது. மொத்தம் 15 பேர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப் பட்டது.

**சிலுவைப்பாதை**

முஞ்சிறை திருத்தலத்தில் உறவியங்களில் சிலுவைப் பாதை நடைபெற்றது. அனைத்து வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் சிறப்புத் திருப்பலி மற்றும் ஆராதனையும் நடைபெற்று வருகிறது.

**90ஆம் ஆண்டில்**

எஸ். டி துறவற சபையின் 90 ஆம் ஆண்டு மற்றும் புனித சூசையப்பர் திருநாள் 18.03.2017 அன்று முதியோர்கள் மற்றும் பங்கு மக்களோடு இணைந்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்பக முதியோர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

தகவல் சேகரிப்பு, திருமதி. செலின் மேரி/ ஹேமா/ சினேக லதா

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISH P'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

10 March 2017

Proto. No. **ETHUKLY/SUSP/02/2017**

## DECREE OF SUSPENSION


As the act of previous warning letter dated 03 February 2017,


Fr. Samuel Roselet from the parish of St. Thomas Mission Perumchilampu born on 09 May 1989 and ordained on 01 April 2016 for the Eparchy of Thuckalay is hereby suspended as per CCEO canon 1453 & 1 from the exercise of Sacred Ministry including the administration of the sacraments. It is further decreed that he shall not be admitted anywhere for discharging of any priestly ministry either inside or outside of the Eparchy of Thuckalay until further orders to the contrary.

He is hereby deposed from all the office of clerical state and considered as lay person according to CCEO canon 1433, but the dispensation from the priesthood is reserved to Apostalic See, Rome.

Hereby he has no right to receive any favour as a priest from the eparchy of Thuckalay and he is self responsible for every act that he does.

Given from the Bishop's Office on 11 March 2017





✞Mar George Rajendran SDB
Bishop of Thuckalay

Rev. Fr. M. Christhudas
Chancellor




"இயேசுவின் திருச்சிலுவையே! கடவுள் மீதும், நன்மைத்தனத்தின் மீதும், ஒளியின் மீதும், நாங்கள் கொள்ளவேண்டிய பேரார்வத்தைத் தூண்டியருளும்"

## BISHOP'S ENGAGEMENTS APRIL 2017

| *DATE* | *DAY* | *TIME* | *EVENTS* |
|---|---|---|---|
| 1 | Sat | 06.00 pm | CMI Synaxis at TVM |
| 2 | Sun | 08.00 am | Mankarai: Pastoral Visit |
| 3\|4 | Mon | 09.30 am | Bishop's House\| Curia Meeting |
| **5** | **Wed** | **09.30 am** | **Nagercoil: Inayam Protest Rally** |
| 6 | Thu | 10.00 am<br>04.30 pm | Soosaipuram: Alphonsa College, Seminar<br>Madathattuvilai: B.Ed College, Annual Day |
| 7 | Fri | 07.00 pm | Sangamam: Meeting Major Seminarians |
| 8 | Sat | 10.00 am | Soosaipuram: College Meeting with 12 Students |
| **9** | **Sun** | **08.00 am** | **Palapallam: Pastoral Visit** |
| 10 | Mon | 07.00 am<br>10.00 am | Sangamam: Vestition and Minor Orders<br>Kottar: Recollection for Priests |
| 11 | Tue | 09.30 am | Sangamam: Recollection for Priests and Religious |
| 12 | Wed | 05.30 pm | Pilankarai: Diaconate Ordination of Bro. Jebanesh |
| 13 | Thu | 05.30 pm | Marappady: Pesaha Thursday |
| 14 | Fri | 09.30 am<br>12.00 pm | Puliyarai: Good Friday Service<br>Shenkottai Mission: Stations of the Cross |
| 15 | Sat | 11.00 pm | Great Saturday\| Malaicode: Easter Qurbana |
| **16\|**17 | **Sun** | | **Easter Sunday\|** Bishop's House |
| 18 | Tue | | Kumarakoil: Recollection |
| 19 | Wed | 09.15 am | Ordination of Dn. Vinu D. Joseph at Kattathurai |
| 20 | Thu | 09.30 am | Ordination of Dn. John Joseph at Karode |
| 21 | Fri | 05.30 pm | Munchirai: Feast Day Holy Qurbana |
| 22 | Sat | 12.30 pm | Muttuchira: House Blessing |
| **23** | **Sun** | **11.00 am**<br>**02.00 pm** | **Thekkekara: Eucharistic Procession**<br>**Changanacherry: Episcopal Ordination** |
| 24 | Mon | 02.00 pm | Meeting with Palliative Patients |
| 25 | Tue | 02.30 pm | Padanthalumoodu: Interdepartmental Meeting |
| 26 | Wed | 09.30 am<br>11.30 am | Bishop's House: Curia Meeting<br>Nagercoil: First Holy Communion at Assisi |
| 28 | Fri | 06.30 am | Final Profession Qurbana at FCC Provincial House |
| 29 | Sat | 02.00 pm | Koothrapalli: SABS Jubilee Qurbana >> Kannur |
| **30** | **Sun** | | **Kannur: First Holy Communion >> Thuckalay** |

Fr. Thomas Sathianesan, Eparchial Secretary




KKSSS, Women's Day
Soosaipuram
05.03.2017



Lenten Magic Show
Kattathurai
25.03.2017




Sports Day
St. Alphonsa College
10-11.03.2017

இடம்: தூய அந்தோணியார் திருத்தலம் வெட்டுமணி



தவக்கால இரத்ததான முகாம்.
நாள் 29.03.2017





## Running Successfully

**இலவச பயற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

பாடங்கள் IT, Sales and Retail & Hospitality

சிறப்புப் பயிற்சிகள்: இலவச கணினி & ஆங்கிலம்

பயிற்சி காலம்: 3 மாதங்கள்

Third Batch Begins on 8th May, 2017

பயிற்சி மைய முகவரி

**அனைவருக்கும் வேலை**

# DB Tech

புனித ஜார்ஜியார் ஆலயம், முஞ்சிறை, புதுக்கடை 629171,
குமரி மாவட்டம், தொ.பே: 04651-235277
அ.பே: 9443778014, 9786395536, 9487080596



For Private Circulation Only
IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570